முருகப்பெருமான் துணை

**மகான் பீமசேனன் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.04.2023**, வெள்ளிக்கிழமை

1. தருமத்தின் காவலனே வாழ்க வாழ்க
   தயாபரனே ஞானத் தலைவனின்
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
   அண்ணலே உன்பெருமை கூறி
2. கூறியே சோபகிருது தகரின் திங்கள்
   குறைவிலா முதல் திகதி புகர் வாரம்
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் முதல் நாள், 14.04.2023, வெள்ளிக்கிழமை)
   தெரிவிப்பேன் பீமசேனன் யானும்
   தேசிகனுக்கு அனுகூல ஆசிதனை
3. ஆசிதனில் தமிழ் புத்தாண்டிலே
   அகத்தியர் சன்மார்க்கம் சங்கம்
   நேசமுள்ள உயர் மாந்தர்களின்
   நீதிமான்களின் ஞானவான்களின் நெருக்கம் கூடி
4. கூடியே சங்கத்தின் கிளைகள்
   குவலயம் எங்கும் விரிவடையும்
   தேடியே சன்மார்க்க நெறிதனை
   தேசிகனின் வழிகாட்டலை வணங்கி
5. வணங்கி ஏற்று மாற்றமாக
   வல்லமை மக்களிடை கூடும்
   வணங்கி வரும் மக்கள் வாழ்வில்
   வள்ளல் தன்மை பெருகியே
6. பெருகியே பிறவிப் பயனடைய
   பேதமையிலா ஞானத்தெளிவு
   குருவருளாகத் திருவருளாக வந்து
   கூறிடுவேன் பூரணத்துவம் காணும்
7. காணவே அரங்கமகானின்
   கரங்கள்பட பெரும் தீட்சை
   ஞானமாக சர்வபலமாக வந்து
   ஞானவாழ்வை தந்தருளுமென்பேன்

8. என்கவே இவை நன்னாள் முதல்
இனி உலகோர் பிரணவக்குடிலை
நன்மை கருதி அனுகியே
ஞானிகளின் பூசை கலந்து

9. கலந்துமே கந்தப்பெருமானருளும்
காப்பான அருமருந்தாம் குடிலமுது
பலம்பெற ஆயுள் திடம்பெற
பாவ வினை அகன்றுமேவ

10. மேவவே அருளமுதினை உண்டு
முருகா அரங்கா அகத்தீசா
அவதார ஞானியே புஜண்டமகரிஷியே என
அவரவரும் முழங்க செபதபம்

11. செபதபம் செய்து வருதலுற
சித்திகளும் வரமாகக் கிட்டி
அபயமென சோபகிருது ஆண்டினுள்
அற்புதம்பல நிகழக் கூடும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—